

# யா/பன்னாலை சேர் கனகசபை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை

# அதிபர் அறிக்கை 2018





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/பன்னாலை சேர் கனகசபை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை

## வருடாந்த பரிசளிப்பு விழா – 2018

காலம் : 01.12.2018 (சனிக்கிழமை) பி.ப 01.30 மணி

இடம் : பாடசாலையின் பொன்னையா கலையரங்கு

### தலைவர்

திரு.கதிரேசு பத்மநாதன்

(அதிபர், யா/பன்னாலை சேர் கனகசபை அ.த.க பாடசாலை)

### பிரதம விருந்தினர்

உயர்திரு.சிவசம்பு மதியழகன்

(பிரதிக்கல்விப் பணிப்பாளர், கல்வி முகாமைத்துவம்
வலிகாமம் கல்வி வலயம்)

### சிறப்பு விருந்தினர்

திருமதி.ஜெயந்தி கணேசதாசன் (பழைய மாணவர்)

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

### ஆசியுரை

பிரம்மஸ்ரீ ம.மகேந்திர சர்மா அவர்கள்

(பிரதம குரு, வரத்தலம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

- விருந்தினர்களை அழைத்தல்
- கொடியேற்றல்
- மங்கள விளக்கேற்றல்
- தேவாரம்
- வரவேற்பு நடனம்
- விருந்தினர்களை மேடைக்கு அழைத்தல்
- வரவேற்புரை
- ஆசியுரை
- அதிபர் அறிக்கை
- சிறப்பு விருந்தினர் உரை
- பிரதம விருந்தினர் உரை
- பரிசில் வழங்கல்
- நன்றியுரை
- கலை நிகழ்வுகள்
- பாடசாலைக் கீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/பன்னாலை சேர் கனகசபை
# அரசினர் தமிழ் கலவன் பாடசாலை

## மகுடவாசகம்

"கற்றனைத் தூறும் அறிவு"

## தூரநோக்கு (VISION)

"மீண்டும் தொடங்கும் மிடுக்குடன் வித்தியாலயத்தைக் கட்டி எழுப்பி நற்சமூகத்தை உருவாக்குவோம்."

## பணிக்கூற்று (MISSION)

"மக்களின் அபிலாசைகட்கும் தேசிய கல்விக் கொள்கைகட்கும் முன்னுரிமை அளித்து பாடசாலையின் பௌதிக மனிதவள விருத்தியினூடாக பாடசாலையின் தரத்தையும் மாணவர்களின் தரத்தையும் உயர்த்தி கல்வி அறிவும் உடல் வலுவும் நற்பண்புகளும் நிறைந்த மாணவர்களை உருவாக்கி வழங்குவோம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

எல்லாம் வல்ல பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகப் பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிந்து வணங்கி, எமது பாடசாலையின் அருகில் எழுந்தருளி அருளாட்சி புரியும் மயிலையம்பதி ஞானவைரவப் பெருமானின் திருவருளை வேண்டித் துதித்து, பாடசாலையின் ஸ்தாபகர் சேர்.அம்பலவாணர் கனகசபை அவர்களை மானசீகமாக வணங்கி 2018 ஆம் ஆண்டிற்கான அதிபர் அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

யா/பன்னாலை சேர்.கனகசபை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் 2018ஆம் ஆண்டிற்கான பரிசளிப்பு விழாவின் பிரதம விருந்தினராக வருகை தந்து அவையை அலங்கரித்துக்கொண்டிருக்கும் வலிகாமம் கல்வி வலயத்தின் கல்வி முகாமைத்துவப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு.சிவசம்பு மதியழகன் அவர்களே, சிறப்பு விருந்தினராக வருகை தந்து விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது பாடசாலையின் பழைய மாணவியும், ஓய்வுபெற்ற ஆசிரியருமாகிய திருமதி.ஜெயந்தி கணேசதாசன் அவர்களே, ஆசியுரை வழங்க வந்திருக்கும் பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ மகேந்திரசர்மா அவர்களே, அவையிலே அமர்ந்திருக்கும் பெரியோர்களே, அயற் பாடசாலைகளின் அதிபர்களே, ஆசிரியர்களே, ஏனைய உத்தியோகத்தர்களே, பெற்றோர்களே, பழைய மாணவர்களே, நலன் விரும்பிகளே, எமது பாடசாலையின் ஆசிரியர்களே, மாணவச் செல்வங்களே உங்கள் அனைவருக்கும் எனது இனிய வணக்கம்.

எம் அன்பான அழைப்பை ஏற்று இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் திரு.சிவசம்பு மதியழகன் அவர்கள், யாழ் பல்கலைக்கழகத்தின் வணிகப்பட்டதாரி ஆவார். இலங்கை கல்வி நிர்வாக சேவையின் பொது ஆளணியைச் சேர்ந்த இவர், வலிகாமம் கல்வி வலயத்தின் கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளராக விளங்குகிறார். மேல் மாகாணத்தில் இருந்து இடமாற்றம் பெற்று அண்மையில் வலிகாமம் கல்வி வலயத்தில் கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ளார். கடமை உணர்வும், சேவைத் துடிப்பும் கொண்ட இவர் வலிகாமம் வலயப் பாடசாலைகளின் கல்வி வளர்ச்சி, அபிவிருத்தி என்பனவற்றில் கூடிய கவனம் செலுத்தி வருகிறார். அத்தோடு அனைவருடனும் மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிமையாகவும், அன்பாகவும், அன்னியோன்யமாகவும் பழகி தனது நோக்கத்திற்குரிய தகவல்களைப் பெற்றுக்கொள்வார். இவர் எமது பாடசாலையின் தேவைகளை அறிந்து அதன் வளர்சிக்காகவும் தம்மால் இயன்ற ஒத்துழைப்பை நல்கி எம்மை ஊக்குவிப்பார் என நம்புகின்றேன்.

சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் திருமதி.ஜெயந்தி கணேசதாசன் அவர்கள் எமது பாடசாலையின் புகழ் பூத்த பழைய மாணவியாவார். தரம் 1 - 11 வரை இப்பாடசாலையில் கற்றுத்தேர்ந்தார். தமது பாடசாலைக் காலத்தில் கல்வி மற்றும், இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும், ஒழுக்க நெறியிலும் சிறந்து விளங்கி ஆசிரியர்களின் நன்மதிப்பை பெற்றவர். யாழ் பல்கலைக்கழக கலைப் பட்டதாரியான இவர் நீண்டகாலம் வன்னிப் பிரதேசத்திலும், பின்னர் வலிகாமம் வலயத்திலும் தனது ஆசிரியப் பணியைச் சிறப்புடன் ஆற்றி ஓய்வு பெற்றுள்ளார். பாடசாலையின் மீது மிகுந்த பற்றுடைய இவர் இந் நிகழ்வுக்குச் சிறப்பு விருந்தினராக வருகை தந்தமையை இட்டு பெருமகிழ்வு அடைகின்றோம்.

ஆசியுரை வழங்க வருகை தந்திருக்கும் பிரம்மஸ்ரீ மகேந்திர சர்மா அவர்களும் இப்பாடசாலையின் பெருமைக்குரிய பழைய மாணவர் ஆவார். எமது பாடசாலையில் நவராத்திரி விழாக்காலத்தில் தினமும் சக்தி பூசை நிகழ்த்தி இறை ஆசி பெற்றுத் தருவதோடு ஏனைய நிகழ்வுகளுக்கும் தவறாது உரிய நேரத்தில் வருகை தந்து சிறப்பிப்பவர். இவரது வருகையால் நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

## பாடசாலையின் வளர்ச்சி

எமது பாடசாலை ஒரு நீண்ட கால வரலாற்றைக் கொண்டது. 1855ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்று 163 அகவையை அடைந்துள்ளது. தற்பொழுது முன்பள்ளிப் பிரிவுடன் தரம் 1 தொடக்கம் 9 வரையான வகுப்புக்கள் இடம்பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையின் மேம்பாடு தொடர்பாகக் கவனிக்க வேண்டிய விடயங்கள்.

எமது பாடசாலை 1986ஆம் ஆண்டுவரை க.பொ.த(சா/த) வரை வகுப்புக்களைக் கொண்ட பாடசாலையாக விளங்கியது. எனினும் போர்ச் சூழலால் ஏற்பட்ட இடப்பெயர்வு இப்பாடசாலையைப் பெரிதும் பாதித்துள்ளது. தற்பொழுது "மீண்டும் தொடங்கும் மிடுக்குடன்" பாடசாலை வளர்ச்சி கண்டு வருகிறது.

மாணவர்களின் முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு 2019ம் ஆண்டில் தரம் 10ஐ ஆரம்பிப்பதற்காக அனுமதி கோரி வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளரிடம் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

அன்பார்ந்த பெற்றோர்களே "அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" என்பதை உணர்ந்து உங்கள் பிள்ளைகளை இங்கு சேருங்கள். நல்லொழுக்கத்துடன் கூடிய தரமான கல்வியை வழங்க நாம் தயாராக உள்ளோம் என்பதை இச்சந்தர்ப்பத்தில் உங்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

## கல்வி மற்றும் இணைபாடவிதானச் செயற்பாடுகள்

### புலமைப் பரிசில் பரீட்சை - 2018

மேற்படி பரீட்சைக்கு 09 பேர் தோற்றியுள்ளனர். 03 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். 02 மாணவர்கள் 100 - 70 புள்ளிகள் பெற்றுள்ளனர்.

### விளையாட்டு

மாணவர்களின் உடல், உள ஆரோக்கியத்தைப்பேணி சிறந்த ஆளுமைப் பண்பை விருத்தி செய்வதில் விளையாட்டுக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அந்த வகையில் இவ்வருடமும் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி 02.05.2018 அன்று சிறப்பாக இடம்பெற்றது. சகல மாணவர்களும் பங்குபற்றி தமது திறன்களை வெளிப்படுத்தக்கூடியதாக விளையாட்டுக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டன.

நிகழ்வின் பிரதம விருந்தினராக திரு.சு.தேவமனோகரன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், (திட்டமிடல்) வலிகாமம் கல்வி வலயம் அவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டத்தில் திறமையை வெளிக்காட்டிய மாணவர்கள் கோட்ட வலய மட்டப் போட்டிகளில் வெற்றிபெற்று மாகாண மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளிலும் பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தினர்.

விபரம் வருமாறு

| மாணவர் பெயர் | வயதுப் பிரிவு | விளையாட்டு நிகழ்வு | கோட்டம் | வலயம் | மாகாணம் |
|---|---|---|---|---|---|
| கு.கஜானன் | 15 வயதின் கீழ் (ஆண்) | 60m ஓட்டம்<br>60m ஓட்டம்<br>நீளம் பாய்தல் | 1<br>1<br>2 | 4<br>4<br>4 | |
| ம.விதுர்சன் | 10 வயதின் கீழ் (ஆண்) | நீளம் பாய்தல்<br>உயரம் பாய்தல் | 3 | <br>1 | <br>பங்குபற்றியமை |
| ந.விதுசிகா | 12 வயதின் கீழ் (பெண்) | குண்டு போடுதல்<br>உயரம் பாய்தல் | 2 | 3<br>2 | பங்குபற்றியமை<br>பங்குபற்றியமை |

இம்மாணவர்களைப் பாராட்டுவதோடு இவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்களையும் விளையாட்டுக் குழுவின் செயலாளர் திரு.தி.பரமேஸ்வரன் (உப அதிபர்) அவர்களையும் பாராட்டுகின்றேன்.

மேலும் மாணவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கிவரும் திரு.சி.கமலமோகன் (உடற்கல்வி ஆசிரியர், யா/அளவெட்டி அருணோதயாக் கல்லூரி) அவர்களுக்கு எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## மேலைத்தேச வாத்திய இசைக்குழு

மேற்படி குழுவில் 28 மாணவர்கள் இணைந்து பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்கள் அனைவரதும் பாராட்டைப் பெறத்தக்க வகையில் சிறந்த முறையில் இசை, அணிவகுப்பு மரியாதையை நிகழ்த்தி வருகின்றனர். இக்குழுவின் பொறுப்பாசிரியர்களாக திருமதி.த.கணேசானந்தன் , திருமதி.க.கமலமோகன் ஆகியோர் செயற்படுகின்றனர். இவர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடல் முன்னோடிக் கழகம்

ஆரம்பப் பிரிவு சிறுவர் சுற்றாடல் முன்னோடிக் குழுவில் 17 மாணவர்கள் இணைந்துள்ளனர். இதன் பொறுப்பாசிரியராக திருமதி.த.திருக்கேதீஸ்வரச் செல்வன் தொழிற்படுகின்றார். தரம் 6 - 9 வரையான மாணவர்கள் 27 பேர் சுற்றாடல் முன்னோடிக் கழகத்தில் இணைந்துள்ளனர். பொறுப்பாசிரியர்களாக திருமதி.த.கணேசானந்தன், திருமதி.கோ.சிவனேசன் ஆகியோர் தொழிற்படுகின்றனர்.

இக்குழுவினர் பாடசாலை வளவினுள் பூஞ்செடிகளை நாட்டிப் பராமரித்தல், மூலிகைத்தோட்டம் அமைத்தல் என்பவற்றில் ஆர்வத்துடன் செயற்படுகின்றனர்.

மேலும் இவ்வருடம் பன்னாலை கணேசன் இளைஞர் கழகத்தினர் சுற்றாடல் தினத்தை ஒட்டி பாடசாலை வளவில் நாட்டிய கமுக மரம் (14), மற்றும் தேக்கமரம் ஆகியவற்றை இக்கழக மாணவர்கள் தொடர்ந்து பராமரித்து வருகின்றனர். இவர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்கள்.

## கல்விச் சுற்றுலா

மாணவர்களது கற்றல் செயற்பாட்டினை அனுபவக் கல்வியின் ஊடாக வளம்படுத்த வருடம் தோறும் எமது பாடசாலையில் கல்விச் சுற்றுலா ஒழுங்கு செய்யப்படுகின்றது. அந்த வகையில் இவ்வருடம் தரம் 3 - 9 வரையான மாணவர்கள் கல்விச் சுற்றுலாவில் பங்கு கொண்டனர். இச் சுற்றுலாவின் போது நிலாவரை ஊற்று, வடமாகாண சபை, கைதடி முதியோர் இல்லம், நாவற்குழி சிவபூமி, திருவாசக அரண்மனை ஆலயம், நல்லூர்க் கந்தன் ஆலயம், யாழ் பழைய பூங்கா, கந்தரோடை புதைபொருள் ஆய்வு நிலையம் போன்ற இடங்களை பார்வையிட்டு அவற்றின் சிறப்புக்களை அறிந்து கொண்டனர்.

## கட்டாயக் கல்விக்குழு

கல்வி கற்பது பிள்ளையின் அடிப்படை உரிமை என்ற அடிப்படையில் இக்குழு செயற்படுகின்றது.பிள்ளைகளின் வரவு ஒழுங்கு, நேரத்திற்குப் பாடசாலைக்கு வருதல், மாணவர்களின் நலனோம்பு போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களில் இக்குழு கவனம் செலுத்தி வருகின்றது. இதன் பொறுப்பாசிரியர்களாக திரு.பொ.ஆதவன், திருமதி.க.கமலமோகன் ஆகியோர் செயற்படுகின்றனர். இவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

## மன்றங்கள்

### இந்து மன்றம்

சைவ விழுமியப் பண்புகளை வளர்க்கும் நோக்குடனும், மாணவர்களிடையே சமயபாட அறிவினை மேம்படுத்தும் நோக்குடனும் இந்துமன்றம் இயங்கி வருகின்றது. இம்மன்றத்தின் ஊடாக சமய குரவர் நால்வர் குருபூசைகள், நவராத்திரி விழா மற்றும் அதனை ஒட்டிய போட்டிகள் என்பன சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் வெள்ளிக்கிழமைகளில் ஆறுமுக நாவலர் சைவ வினாவிடை வினாக்கள், தியானப் பயிற்சிகள் என்பன வழங்கப்படுகின்றன.

இம்மன்றத்தின் பொறுப்பாசிரியர்களாக திருமதி.கோ.சிவனேசன், திருமதி.க.கமலமோகன் ஆகியோர் சிறப்பாகச் செயற்படுகின்றனர். இவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

### மாணவர் மன்றம்

வாரந்தோறும் வெள்ளிக்கிழமை இறுதிப் பாடவேளையில் மாணவர் மன்றச் செயற்பாடுகல் சிறப்பாக இடம்பெறுகின்றன. இவற்றின் பொறுப்பாசிரியர்களாக,

- தமிழ் மன்றம் :- திருமதி.ஜெ.விநாயகசீலன்
- சமூக விஞ்ஞான மன்றம் :- திருமதி.கோ.சிவனேசன்
- ஆங்கில மன்றம் :- திருமதி.சு.கலைவாணி
- விஞ்ஞானகணித மன்றம் :- திருமதி.த.கணேசானந்தன், திரு.க.விமலநாதன்
- நுண்கலை மன்றம் :- திருமதி.க.கமலமோகன்
- சுகாதார மன்றம் :- திருமதி.சு.கலைவாணி, திரு.க.விமலநாதன்

ஆகியோர் இருந்து மன்றச் செயற்பாடுகளை வழி நடத்தி வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வருடம் சமூக விஞ்ஞானம் வலயமட்டப் போட்டியில் பின்வரும் மாணவர்கள் வெற்றி பெற்று மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றியுள்ளார்கள்.

- வ.சுபிராஜ் (தரம் 9) வலயமட்டம் 1ம் இடம்
- சு.கஜனி (தரம் 7) வலயமட்டம் 3ம் இடம்
- சி.திவானுஜன் (தரம் 6) வலயமட்டம் 1ம் இடம்

கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டியில்,

தரம் 6 தி.மதிஜா பிரிவு 1 கட்டுரை ஆக்கம் 3ஆம் இடம்,

தரம் 5 கு.கஜானன் பிரிவு 1 வாசிப்பு 2ஆம் இடம் பெற்றனர்.

மேலும் வலி வடக்குப் பிரதேச சபையின் தெல்லிப்பளை பொது நூலகத்தால் நடாத்தப்பட்ட வாசிப்பு மாதப் போட்டிகளில் கலந்துகொண்டு பின்வரும் மாணவர்கள் வெற்றி பெற்றனர்.

| மாணவர் பெயர் | தரம் | போட்டி | நிலை |
|---|---|---|---|
| இ.சஞ்ஜெய் | 2 | ஓட்டுச் சித்திரம் | 1 |
| சி.மேனுஜன் | 2 | ஓட்டுச் சித்திரம் | 2 |
| த.சாருஜன் | 6 | சித்திரம் | 2 |
| க.ரஜீவன் | 6 | சித்திரம் | 3 |
| சி.திவ்யா | 9 | பேச்சு | 2 |
| சு.அர்ச்சனா | 8 | பேச்சு | 3 |

கோட்ட மட்ட ஆங்கில தினப் போட்டியில் இடை நிலைப் பிரிவு நாடகம் 2ம் இடம் பெற்றுள்ளது. வெற்றி பெற்ற மாணவர்களையும் அவர்களைப் பயிற்றுவித்த பொறுப்பாசிரியர்களையும் பாராட்டுகின்றேன்.

## ஆரம்ப பிரிவு மன்றம்

இம் மன்றத்தின் பயிற்றுவிப்பாளர்களாக திரு.தி.பரமேஸ்வரன், திரு. பொ.ஆதவன், திருமதி.த.திருக்கேதீஸ்வரச்செல்வன், திருமதி. த.காங்கேயன், திருமதி.க.சிவானந்தன், திருமதி.ப.சக்திக்குமரன் ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர். இவர்கள் ஆரம்பப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் கல்வி மற்றும் இணை பாடவிதானச் செயற்பாடுகளில் கூடிய அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வருடம் சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டம், கால்கோள் விழா, தைப்பொங்கல் விழா ஆகியவற்றைச் சிறப்பாக கொண்டாடியுள்ளனர்.

இவ்வருடம் செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் தரம் 4 கலப்பு அணி கோட்ட மட்டப் போட்டியில் 3ம் இடத்தினைப் பெற்று வலயமட்டப் போட்டியில் பங்குபற்றி உள்ளனர். இவர்களுக்கும் இவர்களை வழிப்படுத்தி வரும் ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

## ஆசிரியர் கழகம்

இக்கழகமானது ஆசிரியர்களின் குடும்பங்களில் இடம்பெறும் முக்கிய நிகழ்வுகளில் கலந்து தமது ஒத்துழைப்பை வழங்கி வருகிறது. இவ்வருடமும் எமது பாடசாலை வளவினை நாளாந்தம் சுத்தம் செய்யவெனப் பணியாளர் ஒருவரை நியமித்து அவருக்கான வேதனத்தையும் வழங்கி வருகின்றது.

மேலும் பாடசாலையின் பரிசளிப்பு விழா, நவராத்திரி விழா, திருக்கேதீஸ்வரர் ஆலயம், விழிப்புலன் வலுவிழந்தோர் சங்கம், வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் ஆகியவற்றிற்கும் இவ்வருடம் நிதியுதவி வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

## புதிதாக இணைந்த ஆசிரியர்கள்

இவ்வருடம் 4 ஆசிரியர்கள் எமது ஆசிரிய குழாத்துடன் இணைந்துள்ளார்கள்.

- திருமதி.பகீரதி சக்திகுமாரன் (ஆரம்பப்பிரிவு)
- திரு. நந்தகோபால் சிவகுமாரன் (சித்திரம்)
- திருமதி.ஜெனனி வினாயகசீலன் (தமிழ்)
- திருமதி.ஜனிதா சிறீகாந்தன் (வர்த்தகம்)

இவர்களது பணி சிறக்க எனது வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை சமூகத் தொடர்பு

## பாடசாலை அபிவிருத்திக் குழு

பாடசாலை அபிவிருத்திக் குழுவானது அபிவிருத்திச் செயற்பாடுகளைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், மீளாய்வு செய்தல் என்பவற்றில் தமது பங்களிப்பினை சிறப்பாக வழங்கி வருகின்றது.

உறுப்பினர்கள் விபரம்

- தலைவர் : திரு.க.பத்மநாதன் (அதிபர்)
- உபதலைவர் : திரு.தி.பரமேஸ்வரன் (உப அதிபர்)
- செயலாளர் : திருமதி.சி.பரஞ்சோதி
- வலயக் கல்வி அலுவலகப் பிரதிநிதி : திருமதி.கோசலை குலபாலசிங்கம் (தொழில் வழிகாட்டல் அதிகாரி, வலிகாமம் கல்வி வலயம்)
- பொருளாளர் : திருமதி.கோ.சிவனேசன் (ஆசிரியர்)
- ஏனைய உறுப்பினர்கள்
  - திருமதி.ச.முருகானந்தன், திருமதி.ச.செந்தூரன்
  - திரு.க.மகேஸ்வரன், திருமதி.ப.சக்திகுமரன்
  - திருமதி.க.கமலமோகன்

## பழைய மாணவர் சங்கம்

பழைய மாணவர் சங்கமானது பாடசாலை அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குப் பக்கபலமாக உள்ளது. மேலும் பரிசளிப்பு விழா, இல்ல மெய்வல்லுனர் போட்டி, ஆசிரியர் தின விழா போன்ற நிகழ்வுகளுக்கும் ஏனைய தேவைகளுக்கும் நிதி உதவிகளையும், ஊக்குவிப்புக்களையும் வழங்கி வருகின்றது.

## உறுப்பினர் விபரம் வருமாறு

- தலைவர் : திரு.க.பத்மநாதன் ( அதிபர்)
- இணைப் போஷகர்கள் : திரு.க. நடராஜர் (ஓய்வு நிலை உதவி அரசாங்க அதிபர், தெல்லிப்பளை), திருமதி.அ.முத்துக்குமாரசாமி (ஓய்வு நிலை அதிபர், யா/உடுவில் மான்ஸ் ம.வி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- செயலாளர் : திருமதி.இ.ஈஸ்வரானந்தம்
- பொருளாளர் : திருமதி.க.செந்தூரன்
- நிர்வாகசபை உறுப்பினர்கள் : திருமதி.க.நவமணி, திருமதி.கா.யோகேஸ்வரி, திருமதி.க.கமலாம்பிகை, திருமதி.ச.தயாழினி, திரு.ஜெயக்குமார்

## சேர் கனகசபை முன்பள்ளி

தற்போது எமது முன்பள்ளியில் 26 மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர். இவர்கள் குடும்ப மட்டத்தில் நடைபெறும் பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்று வருகின்றனர்.

இவ்வருடம் குடும்ப மட்ட விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி 10 விளையாட்டுக்களில் 7 விளையாட்டுக்களில் 1ம் இடத்தைப் பெற்று பிரதேச மட்டப் போட்டியில் பங்குபற்றினர்.

முன்பள்ளிப் பொறுப்பாசிரியராக செல்வி.ச.றமீனா, செல்வி.கா.கஜானி ஆகியோர் கடமையாற்றி வருகின்றனர். இவர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியும் நிறைவும்

எமது பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகைந்தந்து விழாவைச் சிறப்பித்து பரிசில்களை வழங்க இருக்கும் திரு.சிவசம்பு மதியழகன் (கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்) அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றிகள்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பழைய மாணவி திருமதி.ஜெயந்தி கணேசதாசன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களுக்கு எமது உளம் கனிந்த நன்றிகள்.

ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கும் பிரம்மஸ்ரீ ம.மகேந்திரசர்மா அவர்களுக்கும் உளமுவர்ந்த நன்றிகள்.

இங்கு வருகை தந்து சிறப்பித்த பெரியோர்கள், அயற் பாடசாலை அதிபர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

பரிசளிப்பு விழாவைச் சிறப்பாக நடாத்த உதவிய உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

இவ்விழா சிறப்புற நிகழ நிதியுதவி அளித்தோர், (விபரம் இணைக்கப்பட்டுள்ளது) மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிகளை வழங்கியோருக்கும் எனது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்து எனது அறிக்கையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி- வணக்கம்

திரு.க.பத்மநாதன்
அதிபர்
01.12.2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையின் ஆளணியினர்

01. திரு. க. பத்மநாதன் B.Sc, PGDE (Merit) MATE (Inter national), Sp. trd (Maths) SLPS -2 - II
02. திரு சி. பரமேஸ்வரன் B.A, PGDE, Sp. trd (primary) SLTS - 2 - I
03. திருமதி . கனகேஸ்வரி காங்கேசன் B.A (Hons), PGDE, Mphil, SLTS - I
04. திருமதி. கோசலாதேவி சிவநேசன் B.A (Hons), PGDE, SLTS - I
05. திருமதி. தயமந்தி கணேசானந்தன் B.A PGDE, Sp. Trd (Sc) SLTS -2 - I
06. திருமதி. கலைவாணி சுதாகரன் B. Com (Hons), PGDE, SLTS - 2 - II
07. திரு. கந்தசாமி விமலநாதன் Dip in Teaching (Maths), SLTS - 2 - II
08. திருமதி. கவிதா கமலமோகன் Dip in Teaching (Music), SLTS - 2 - II
09. திரு. பொன்னம்பலம் ஆதவன் G.C.E A/L Sp.Trd (Commerce), SLTS - 3 - I
10. திருமதி. கலைவாணி சிவானந்தன் G.C.E. A/L Sp. Trd (Saivanary), SLTS - 3 - I
11. திருமதி. தவராணி திருக்கேதீஸ்வரச் செல்வன் G.C.E (A/L),Primary (Trd)
12. திருமதி. பகீரதி சக்திக்குமரன் G.C.E (A/L)
13. திரு. நந்தகோபால் சிவகுமாரன் BFA, PGDE, SLTS - 2-II
14. திருமதி.ஜெனனி வினாகசீலன் BA, MA,PGDE,SLTS - 2 - I
15. திருமதி.ஜனிதா சிறீகாந்தன் B.com(Hons), PGDE, SLTS - 2 - I

**கல்விசாரா ஊழியர் (அபிவிருத்தி உத்தியோகத்தர்)**

01. திருமதி. கபிலை சிவராசா (B.A)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசு பெறுவோர் விபரம்

## தரம் 01 - 2018

1. செல்வன் க.பச்லயன்
2. செல்வன் ச.வர்சிகன்
3. செல்வன் அ.லக்சிகன்
4. செல்வன் ர.கிருத்திக்
5. செல்வன் பா.பிரவீன்
6. செல்வன் து.மகிதரன்
7. செல்வன் சி.தனுஷ்
8. செல்வன் சு.விஸ்வின்
9. செல்வி தி.லதுசிகா

## பாட முதன்மை - 2017

தரம் 01

- செல்வி கி.ஜீவிதா - தமிழ், சைவ நெறி, சுற்றாடல் சார் செயற்பாடுகள்
- செல்வன் சி.மேனுஜன் - கணிதம்

## முன்பள்ளி மாணவர்களுக்கான பரிசில்கள்

பிரிவு A

- சி.சோபிகன் - பிரதேச மட்ட நிறம் தீட்டுதல் 9 2ம் இடம்
  குடும்ப மட்டம் - கோலம் போடுதல் - 2ம் இடம்
  தேவாரம் பாடுதல் - 3ம் இடம்
- லோ.திவிஷன் - பிரதேச மட்ட நிறம் தீட்டுதல் - 4ம் இடம்
- ர.சானுஜன்
- ம.வினிஸ்ரன்
- ச.டிலோஜன்
- க.அஸ்வின்
- ஜெ.யர்மிசன்
- இ.பிரஷாஜினி - பிரதேச மட்ட நிறம் தீட்டுதல் - 3ம் இடம்
- கு.தேனுஷா
- நி.கிருஷிகா
- ம.பிறித்திகா
- த.தமிழினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவு B

- ந.சிவதர்சன்
- ச.வானுஜன்
- ய.பிந்துஜன்
- ச.சர்விசன்
- ம.டினோஜன்
- சா.துஷாந்
- கா.யபினாத்
- ஆ.அக்ஷயன்
- த.அஸ்வின்
- த.அபினாஸ்
- ர.சக் ஷனன்
- பி.கிருத்திகா
- ச.கம்சத்வனி
- கி.திலக்னா

தரம் 02

- செல்வி ச.ஷான்ரா - சைவ நெறி, கணிதம்
- செல்வி ச.துவாரகா - தமிழ், சுற்றாடல் சார் செயற்பாடுகள்

தரம் 03

- செல்வி த.அக் ஷயா - தமிழ்
- செல்வி செ.கோபிகா - சைவ நெறி, சுற்றாடல் சார் செயற்பாடுகள், ஆங்கிலம்
- செல்வி லோ.பவிதா - சைவ நெறி, கணிதம்

தரம் 04

- செல்வன் கு.கயானன் - தமிழ், சைவ நெறி, கணிதம், சுற்றாடல் சார் செயற்பாடுகள், ஆங்கிலம்

தரம் 05

- செல்வன் சி.திவானுஜன் - தமிழ்
- செல்வி க.கோபிகா - சைவ நெறி
- செல்வி மு.ஜனந்தினி - கணிதம், சுற்றாடல் சார் செயற்பாடுகள்
- செல்வி ம.மதுவந்தி - ஆங்கிலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 06

- செல்வன் ம.விதுர்சன் - சைவ நெறி, ஆங்கிலம்
- செல்வி சு.கஜனி - தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சங்கீதம், செயன்முறைத் தொழினுட்பத் திறன்கள், சுகாதாரம்

தரம் 07

- செல்வி. ந.விதுசிகா - சைவ நெறி, தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சங்கீதம், சுகாதாரம், செயன்முறைத் தொழினுட்பத் திறன்கள்

தரம் 08

- செல்வி சி.திவ்வியா - சைவ நெறி, ஆங்கிலம், வரலாறு, புவியியல், சங்கீதம்
- செல்வன் வ.சுபிராஜ் - தமிழ், கணிதம், விஞ்ஞானம், குடியுரிமை, செயன்முறைத் தொழினுட்பத் திறன்கள்.
- செல்வி செ.அனுஜா - சுகாதாரம்

தரம் 09

- செல்வன் த. நிஷாங்கன் - தமிழ், ஆங்கிலம், புவியியல், குடியுரிமை
- செல்வன் சி.சிவரூபன் - சைவ நெறி, கணிதம், விஞ்ஞானம், சங்கீதம், சுகாதாரம், செயன்முறைத் தொழினுட்ப திறன்கள்
- செல்வி க.ரேக்கா - வரலாறு

வகுப்பு முதன்மை

1. தரம் 1 - செல்வி.கி.ஜிவிதா
2. தரம் 2 - செல்வி ச.துவாரகா
3. தரம் 3 - செல்வி செ.கோபிகா
4. தரம் 4 - செல்வன் கு.கஜானன்
5. தரம் 5 - செல்வி மு.ஜனந்தினி
6. தரம் 6 - செல்வி.சு.கஜனி
7. தரம் 7 - செல்வி ந.விதுசிகா
8. தரம் 8 - செல்வன் வ.சுபிராஜ்
9. தரம் 9 - செல்வன் சி.சிவரூபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமைப்பரிசில் பரீட்சையில் 153 புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட மாணவன் (2018 ஆம் ஆண்டு) செல்வன் கு.கயானன்

புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

- செல்வி ஜெ.மேரிமனுஸ்ரனா - 129 புள்ளிகள்
- செல்வன் சி.லிவிவர்மா - 127 புள்ளிகள்
- செல்வி சி.தருசிகா - 99 புள்ளிகள்
- செல்வி கு.டனுஜா - 96 புள்ளிகள்

வலயமட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்

தரம் 9

- செல்வன் வ.சுபிராஜ் பிரிவு 1 1ம் இடம்

தரம் 7

- செல்வி சு.கஜனி பிரிவு 1 3ம் இடம்

தரம் 6

- செல்வன் சி.திவானுஜன் பிரிவு 1 1ம் இடம்

கணித ஒலிம்பியாட் போட்டியில் வலயமட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு மாகாண மட்டப் போட்டியில் கலந்துகொண்டமைக்கான பரிசில்

தரம் 6

- செல்வன் சி.திவானுஜன் தமிழ்த்தினப் போட்டியில் கோட்டமட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்

தரம் 6

- செல்வி தி.மகியா கட்டுரைப்போட்டி 3ம் இடம்

தரம் 5

- செல்வன் கு.கயானன் வாசிப்பு 3ம் இடம்
- ஆங்கில தினப் போட்டியில் கோட்டமட்டத்தில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்.
- இடை நிலைப் பிரிவு நாடகம் 2ம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குபற்றிய மாணவர் விபரம்

1. செல்வி சி.திவ்வியா தரம் 9
2. செல்வன் ம.டனீஸ் தரம் 9
3. செல்வி ந.விதுசிகா தரம் 8
4. செல்வன் த.றசாங்கன் தரம் 8
5. செல்வன் ம.விதுர்சன் தரம் 7
6. செல்வன் சி.திவாறுஜன் தரம் 6
7. செல்வி தி.மகியா தரம் 6
8. செல்வி ம.கோபிகா தரம் 6

## விளையாட்டுப் போட்டிகளில் பெற்ற வெற்றிகள்

வலயமட்டத்தில் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்.

**செல்வன் ம.விதுர்சன் (12 வயதின் கீழ் ஆண்கள்)**

- உயரம் பாய்தல் - 1ம் இடம்
- செல்வி ந.விதுசிகா (14 வயதின் கீழ் பெண்கள் உயரம் பாய்தல் - 2ம் இடம்)
- குண்டு போடுதல் 3ம் இடம்.

கோட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்.

**செல்வன் சு.கயானன் (12 வயதின் கீழ் ஆண்கள்)**

- 60 ஓட்டம் - 1ம் இடம்
- 100 ஓட்டம் - 1ம் இடம்
- நீளம் பாய்தல் - 2ம் இடம்

**செல்வி ந.விதுசிகா (14 வயதின் கீழ் பெண்கள்)**

- குண்டு போடுதல் 2ம் இடம்

**செல்வன் ம.விதுர்சன் (12 வயதின் கீழ் ஆண்கள்)**

- நீளம் பாய்தல் 3ம் இடம்

கோட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான செயற்பட்டு மகிழ்வோம் போட்டியிலே கலப்பு அணியில் தரம் 4 மாணவர்கல் 3ம் இடத்தைப் பெற்றுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பங்குபற்றிய மாணவர்கள் விபரம்**

1. செல்வன் கு.வேணுஷன்
2. செல்வன் பா. நவின்சன்
3. செல்வன் மு. நிர்மலன்
4. செல்வன் வி.மருசிகன்
5. செல்வன் தி.ரிசிகரன்
6. செல்வி கு.லோஜிகா
7. செல்வி த.லஸ்திரிகா
8. செல்வி செ.கோபிகா
9. செல்வி லோ.பவிதா
10. செல்வி ந.லோசியா
11. செல்வி த.அர்ச்சயா
12. செல்வி க.சுபலக்சுமி

## தேசிய வாசிப்பு மாத போட்டிகள் - 2018

தெல்லிப்பழை பொது நூலகத்தினரால் நடாத்தப்பட்ட வாசிப்பு மாத போட்டிகளில் பரிசு பெற்ற மாணவர் விபரம்

- செல்வன் கி.சஞ்ஜெய் தரம் 2 ஒட்டுச்சித்திரம் 1ம் இடம்
- செல்வன் சி.மேனுஜன் தரம் 2 ஒட்டுச்சித்திரம் 3ம் இடம்
- செல்வன் த.சாருஜன் தரம் 6 சித்திரம் 2ம் இடம்
- செல்வன் க.ரஜீவன் தரம் 6 சித்திரம் 3ம் இடம்
- செல்வி சி.திவ்வியா தரம் 9 பேச்சு 2ம் இடம்
- செல்வி சு.அர்ச்சனா தரம் 8 பேச்சு 3ம் இடம்

சித்திரைப் புதுவருட தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட பாரம்பரிய விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள்

- செல்வி ம.மேரிமனுஸ்ரனா முட்டி உடைத்தல் 1ம் இடம்
- செல்வி சி.சாமளை முட்டி உடைத்தல் 2ம் இடம்
- செல்வி லோ.பவிதா முட்டிஉடைத்தல் 3ம் இடம்

நவராத்திரியை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர் விபரம்

**சகலகலா வல்லி மாலை ஓதுதல் போட்டி**

- பிரிவு 1 செல்வன் க.பஸ்லயன் 1ம் இடம்
- பிரிவு 2 செல்வி ச.துவாரகா 1ம் இடம்
- பிரிவு 3 செல்வி ம.மாதுமை 1ம் இடம்
- பிரிவு 4 செல்வி தி.மகியா 1ம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிரிவு 5 செல்வி செ.அனுஜா 1ம் இடம்

**கோலம் போடுதல்**

- பிரிவு 1 செல்வன் த.கிருத்திக் 1ம் இடம்
- பிரிவு 2 செல்வன் ஜெ.சோபிதன் 1ம் இடம்
- பிரிவு 3 செல்வி லோ.பவிதா 1ம் இடம்
- பிரிவு 4 செல்வி தி.மகியா 1ம் இடம்
- பிரிவு 4 செல்வன் வ.சுபிராஜ் 1ம் இடம்

**மாலை கட்டுதல்**

- பிரிவு 1 செல்வன் க.பஸ்லயன் 1ம் இடம்
- பிரிவு 2 செல்வன் ந.கிருத்திகன் 1ம் இடம்
- பிரிவு 3 செல்வி லோ.பபிதா 1ம் இடம்
- பிரிவு 4 செல்வி தி.மகியா 1ம் இடம்
- பிரிவு 5 செல்வி ந.விதுசிகா 1ம் இடம்

நவராத்திரி பூஜை காலத்தில் 11 நாட்களும் தொடர்ந்து மாலை கொண்டுவந்த மாணவர்கள்

- செல்வி ர.அஸ்மிரா தரம் 1
- செல்வன் ஜெ.சோபித்ஜன் தரம் 3
- செல்வி லோ.பபிதா தரம் 4
- செல்வன் கு.வேணுசன் தரம் 4
- செல்வன் ஸ்ரீ.திருசிகன் தரம் 5
- செல்வன் கு.கயானன் தரம் 5
- செல்வன் அ.கரிசாளன் தரம் 5
- செல்வன் சி.திவானுஜன் தரம் 6
- செல்வன் சி.றசாங்கன் தரம் 8
- செல்வி சி.திவ்வியா தரம் 9

**வரவு ஒழுக்கம்**

- தரம் 1 செல்வன் சி.மேனுஜன்
- தரம் 2 செல்வி ச.துவாரகா
- தரம் 3 செல்வி ந.லோசியா
- தரம் 4 செல்வி சி.தருசிகா
- தரம் 5 செல்வி க.கோபிகா
- தரம் 6 செல்வன் ம.விதுர்ஷன்
- தரம் 7 செல்வன் யோ.யோகனுஷன்
- தரம் 8 செல்வன் ம.டனீஸ்
- தரம் 9 செல்வி க.ரேக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/பன்னாலை சேர் கனகசபை அ.த.க பாடசாலை

### மாணவர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நடைமுறைகள்

- பாடசாலைச் சீருடை, காலணி, கழுத்துப்பட்டி என்பவற்றை முறையாக அணிந்து வருதல்.
- பாடசாலை மு.ப.7.30 மணிக்கு ஆரம்பமாவதால் மாணவர்கள் மு.ப.7.15 மணிக்கு பிந்தாமல் பாடசாலைக்கு வருகை தரல் வேண்டும்.
- பாடசாலைச் சுற்றுச் சூழல் சுத்தம் பேணல் நடவடிக்கைகளில் தம்மாலான பங்களிப்பை வழங்குதல்.
- பாடசாலை மகிமையையும் கீர்த்தியையும் வெளிக்காட்டக் கூடிய கல்வி, இணைபாடப் பெறுபேறுகளைப் பெறுவதற்கு முயற்சித்தல்.
- இலவசப் பாட நூல்களைச் சுத்தமாகவும் கவனமாகவும் பயன்படுத்திய பின் அடுத்த வருடமும் பயன்படுத்தக் கூடியதாக ஒப்படைத்தல்.
- பாடசாலை நேர சூசிக்கமைவாக வகுப்புப் பாடங்களில் பங்குபற்றிக் கற்றலில் மேன்மையடைதல்.
- ஆசிரியர் வழிகாட்டுதல்களைப் பின்பற்றிக் கற்பதுடன் அவர்களால் வழங்கப்படும் வீட்டு வேலைகள், ஒப்படைகளை உரிய காலத்தில் உரிய அறிவுறுத்தல்களுக்கமைய மேற்கொள்ளுதல்.
- பெற்றோர் பாதுகாவலரை அழைக்கும் சந்தர்ப்பத்தில் தகவலை உரிய முறையில் எடுத்துச் சொல்லி அவர்கள் உரிய நேரத்துக்கு வருகை தர உதவுதல்.
- மாணவர்கள் சுகவினம் தவிர்ந்த ஏனைய காரணங்களுக்காக விடுமுறை எடுத்துக் கொள்வதாயின் முன் அனுமதி பெறுவதோடு வரவு வீதத்தை 90% இற்கு மேல் பேணுதல் வேண்டும்.
- பாடசாலை இடைவேளை தவிர்ந்த ஏனைய நேரங்களில் வகுப்புத் தேவைகளின் நிமித்தம் ஆசிரியர் அனுமதி பெற்ற வகுப்பு முதல்வர் தவிர்ந்த ஏனைய மாணவர்கள் வெளியே செல்வதைத் தவிர்த்தல்.
- பாடங்களுக்காக மாணவர்கள் இடம் மாறுகின்ற போது வரிசையாகச் செல்லுதல் கட்டாயமானது. ஏனைய மாணவர்களுக்குத் தொல்லை கொடுக்கும், துன்புறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடாதிருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாடசாலையில் காலையில் ஒரு மணி கேட்டவுடன் வகுப்பறையில் அமைதியாக எழுந்து நிற்றல். இரண்டாம் மணி கேட்டவுடன் காலைப் பிரார்த்தனைக்குச் செல்வதற்காக வகுப்புக்கு முன்னால் வரிசையில் நிற்றல்.

- மூன்றாம் மணி ஒலித்தவுடன் வரிசையாக காலைப் பிரார்த்தனை இடம்பெறும் இடத்துக்குச் செல்லல்.

- இடைவேளை மணி ஒலித்ததும் வகுப்பு முதல்வர்கள் சமையலறைக்குச் சென்று வகுப்புக்கான உணவைப் பெற்று வரவும், ஏனையோர் வரிசையாகச் சென்று தமக்குரிய நீர்க் குழாய்களில் உணவுக் கோப்பைகளைக் கழுவிச் சுத்தம் செய்து உணவைப் பெற்று வகுப்பறையில் இருந்து உட்கொள்ள வேண்டும். அத்தோடு இடைவேளை முடிவடையுமுன் உணவுக் கோப்பைகளையும் உணவு வாளிகளையும் உரிய இடத்தில் வைத்தல் வேண்டும்.

- பாடசாலை நிறைவு பெறுவதற்காக ஒலிக்கும் முதலாம் மணி ஒலித்தவுடன் வகுப்பறைச் செயற்பாடுகளை முடிவுறுத்தி அமைதியாக இருத்தல் வேண்டும். இரண்டாம் மணி கேட்டவுடன் எழுந்து கவனமாக நிற்றல் வேண்டும். மூன்றாம் மணி கேட்டவுடன் பாடசாலைக் கீதம் இசைக்கப்படும். மாணவர்கள் அதற்கு மதிப்பளித்தல் வேண்டும். நான்காம் மணி ஒலித்தவுடன், வரிசையாக பாடசாலையை விட்டு அகன்று செல்லல் வேண்டும்.

- அதிபரால் அறிவிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களை ஏற்று நடத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதிப்பங்களிப்பு வழங்கியோர்

| | | |
|---|---|---|
| 1. | திருமதி.க.நிமர்மலா | 10,000/= |
| 2. | திரு.செ.சிவநேசன் | 5,000/= |
| 3. | திருமதி.ஜெ.கணேதாசன் | 5,000/= |
| 4. | திருமதி.செ.சசிகலா | 1,000/= |
| 5. | திருமதி.S.சாந்தி | 1,000/= |
| 6. | திரு.க.கதிர்காமத்தம்பி | 500/= |
| 7. | திரு.சு.ஏழூர்நாயகம் | 500/= |
| 8. | திரு.ந.நந்தகுமார் | 1,000/= |
| 9. | திரு.ம.மயூரன் | 3,000/= |
| 10. | திருமதி.அ.ஸ்ரீ.மயூரன் | 1,000/= |
| 11. | திரு.மகாலிங்கம்.மதிதரன் (லண்டன்) | 5,000/= |
| 12. | டாக்டர்.சீ.நவரத்தினம் (பழைய மாணவன் - லண்டன்) மாணவர்களுக்கான பரிசில்ப் பொருட்களுக்காக | 20,000/= |

## நினைவுப்பரிசில் வழங்கியோர்

| | |
|---|---|
| 1. அமரர்.க.ஸ்ரீசுந்தரமூர்த்தி ஞாபகார்த்தம் (இப்பாடசாலையை அரசு கையேற்கும் போது முகாமையாளராக இருந்தமை) வழங்குபவர் :- திரு.க.நடராஜர் (ஓய்வு பெற்ற உதவி அரசாங்க அதிபர்) | 5000/= |
| 2. அமரர்.வி.சங்கரப்பிள்ளை ஞாபகார்த்தம் வழங்குபவர் திருமதி.ச.உமாராணி | 2000/= |
| 3. அமரர்.ஐ.செல்வநாயகி ஞாபகார்த்தம் வழங்குபவர் செல்வி.ஐ.சௌந்தரேஸ்வரி | 1000/= |
| 4. அமரர்.செ.கனகரத்தினம் ஞாபகார்த்தம் வழங்குபவர் திரு.க..செல்வரூபன் | 1000/= |
| 5. அமரர்.விசுவலிங்கம் ஞாபகார்த்தம் வழங்குபவர் திருமதி.சரஸ்வதி ஜெயக்குமார் | 1000/= |
| 6. அமரர்.வ.தியாகராசா ஞாபகார்த்தம் வழங்குபவர் திரு.தி.பரமேஸ்வரன் | 1000/= |
| 7. அமரர்.வைரமுத்து.மாணிக்கவாசகர் ஞாபகார்த்தம் வழங்குபவர் திருமதி.வற்சலா.துரைசிங்கம் | 1000/= |
| 8. அமரர்.பொ.சரஸ்வதியம்மா ஞாபகார்த்தம் வழங்குபவர் திரு.ம.அருள்சோதிநாதன் | 1000/= |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 9. அமரர்.ஆ.சிவபாக்கியம் ஞாபகார்த்தம் வழங்குபவர் திரு.ம.அருள்சோதிநாதன் | 1000/= |
| 10. அமரர்.செல்லத்துரை ஞாபகார்த்தம் வழங்குபவர் திருமதி.பா.முகுந்தன் | 2000/= |
| 11. அமரர்.வ.செல்லையா ஞாபகார்த்தம் வழங்குபவர் செ.மகேஸ்வரி | 1000/= |
| 12. அமரர் கனகசபை.சுப்பிரமணியம் ஞாபகார்த்தம் வழங்குபவர் திரு.சு.சயந்தன் | 1000/= |
| 13. அமரர்.தங்கரத்தினம்.சுப்பிரமணியம் ஞாபகார்த்தம் வழங்குபவர் திரு.ச.சயந்தன் | 1000/= |
| 14. அமரர்வல்லிபுரம்.நாகலிங்கம் ஞாபகார்த்தம் வழங்குபவர் நா.குணபாலசிங்கம் | 1000/= |
| 15. அமரர்.சுப்பிரமணியம்.நடராசர் ஞாபகார்த்தம் வழங்குபவர் திருமதி.ந.அருமைச்செல்வநாயகி | 500/= |
| 16. அமரர்.அண்ணாமலை ஞாபகார்த்தம் வழங்குபவர்.திருமதி.இந்திராணி.ஈஸ்வரானந்தம் | 500/= |
| 17. அமரர்.நித்தியதசீதரன் ஞாபகார்த்தம் வழங்குபவர் திருமதி.இந்திராணி.ஈஸ்வரானந்தம் | 500/= |

- அமரர் இ.அப்பர்சுவாமி ஞாபகார்த்தம் (சட்டத்தரணி, முந்நாள் பாடசாலை முகாமையாளர்)வழங்குபவர் திருமதி.அ.முத்துக்குமாரசாமி எமது பாடசாலை முன்பள்ளியிலிருந்து 2019ல் தரம் 1 க்கு செல்லும் மாணவர்களுக்கான பாதணி, காலுறை
- சித்திவிநாயகர் புத்தகசாலையில் 2000/= பெறுமதியான பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.
- அமரர் இலக்குமிபிள்ளை கந்தையா ஞாபகார்த்தமாக வழங்குபவர் திரு.க.திரநாவுக்கரசு (ஓய்வுபெற்ற அதிபர்) "ஈழத்துத் தமிழ்ப்புலவர் வரலாறு" எனும் நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக்கு கிடைத்த உதவிகள் (13.11.2017) இன் பின்னர் கிடைத்த உதவிகள்

- 2017 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்காக திருமதி.சறோஜா மனோகரன் (டென்மார்க்) அவர்களால் அமரர் வைரமுத்து மாணிக்கவாசகர் நினைவாக ரூபா 4000 அன்பளிப்புச் செய்துள்ளார்.
- மாணவர்களது கல்வி அபிவிருத்திக்காக திரு.இ.சிவகுமார் (பழைய மாணவர் இங்கிலாந்து) அவர்களால் ரூபா 10000 அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.
- அமரர்.திருமதி.ஆ.சிவபாக்கியம் பழைய மாணவி நினைவாக ரூபா 10000 பெறுமதியான நூல்களை திருமதி.கி.திவாஜினி அவர்கள் அன்பளிப்புச் செய்துள்ளார்.

## 2018 இல் கிடைத்த உதவிகள்

- பன்னாலை கணேசன் இளைஞர் கழக அங்கத்தவர்கள் தமது பிறந்த தினங்களை ஒட்டி பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வருகின்றனர்.
- விளையாட்டுப்போட்டிக்கு அன்பளிப்பு வழங்கியோர்
    - துர்க்காதேவி தேவஸ்தானம் (தெல்லிப்பளை) 5000/=
    - திருமதி.தயாளினி.சதீஸ்வரன் 5000/=
    - திருமதி.சரஸ்வதி.ஜெயக்குமார் 1000/=
    - திருமதி.து.வட்சலா 1000/=
    - செல்வி.சௌந்தரேஸ்வரி 1000/=

- திரு.கனகசபை நடராஜர் / ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர், முன்பள்ளி தரம் 1 மாணவர்களின் போக்குவரத்துச் செலவுக்காக ரூபா 18000 அன்பளிப்புச் செய்துள்ளார்.
- Dr.நவரட்ணம் (பழைய மாணவர் இங்கிலாந்து) அவர்கள் போக்குவரத்து வசதி மற்றும் பொருளாதார வசதி குறைந்த முன்பள்ளி, தரம்1 மாணவர்களின் போக்குவரத்துச் செலவுக்காக ரூபா50000 அன்பளிப்புச் செய்துள்ளார் தொடர்ந்து ஒருவருடத்திற்கு மேற்படி செலவைப் பொறுப்பேற்றுள்ளார்.
- கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஓர் அன்பர் 14.11.2018 இல் கொண்டாடப்படும் தமது மகனின் பிறந்த தின விழாவை முன்னிட்டு திரு.பொ.ஆதவன் (ஆசிரியர், வலிவடக்கு பிரதேசசபை உறுப்பினர்) அவர்களின் அன்பான வேண்டுகோளுக்கு இணங்க கற்றலில் ஆர்வமுள்ள தகுதியுடைய மூன்று மாணவர்களுக்கு மூன்று துவிச்சக்கர வண்டிகளை வாங்குவதற்கு ரூபா 50000 ஐ அன்பளிப்புச் செய்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திரு.ம.மயூரன் (விழிசிட்டி) பாடசாலைக்கீதம், கொடிக்கீதம் ஆகியவற்றுக்கு இசை அமைத்து இறுவட்டு தயாரிக்கும் செலவை (ரூபா 7000) பொறுப்பேற்றதுடன் எமது பாடசாலையின் பழைய மாணவியும் திரு.திருமதி.ம.மயூரன் அவர்களின் மகளுமாகிய ம.மதுவந்தி பாடி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

- ஆசிரியரும் வலி-வடக்குப் பிரதேச சபை உறுப்பினருமான திரு.பொ.ஆதவன் அவர்களால் புலமைப் பரிசில் பரீட்சை(2017) இல் சித்தியடைந்து தொடர்ந்து இப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவனுக்கு ஒரு துவிச்சக்கர வண்டி அன்பளிப்பாக வழங்கப்பட்டது

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

திருவு மறிவும் நீதரு வாயே

-ஜெகதீசா

செயவடிவே லிறைமகிழும் தேவர்நாதனே

-திருவு

சகலலோக நாதா சாமிநாமுன் பதமே
சதமதாகப் பணிவோம்சர்வ ஞானந்தரும் போதா

-திருவு

கனகசபைவித் யாலயங் கல்விபயிலு நாமே

- சேர்

அகிலஞான முறைவேபர மாநந்தசொ ரூபா

-திருவு

தமிழின்மகிமை யோங்கச் சகலகலையு மோங்க
நமதுநிலைய மோங்கச் சிவ ஞானம்வளர்ந் தோங்க

-திருவு

ஜீ மல்ரி கொம்பிளெக்ஸ்.
(புன்னாலைக்கட்டுவன் சந்தி)
தொ.பே : 077 3394457

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org